# உங்களால் தேவனோடு விளையாட முடியாது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து



அவன் அங்கே கீழே இறங்கி வந்து, என்னை ஹிப்னாடிஸம் பண்ணி, என்னை ஒரு நாயைப் போன்று குரைக்கச் வைக்கப் போவதாய் இருந்தான். பரிசுத்த ஆவியானவர் மறுபக்கம் திரும்பி, "பிசாசின் மகனே" என்றார். அவன் அந்த நேரம் முதற்கொண்டு பக்கவாதத்தினால் தாக்கப்பட்டான்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: ஆபிரகாமோடு தேவனுடைய உடன்படிக்கை, 56-0428

...மரித்துப் போய் விழவும் முடியும், சரியாக இப்பொழுதே பக்கவாதம் தாக்க லாம்.

நான் கூட்டத்தில் அது சம்பவிப்பதைக் கண்டிருக்கிறேன்.

அது கூட்டங்களில் சம்பவிப்பதை எத்தனை பேர் எப்பொழுதாவது கேள்விப் பட்டிருக்கிறீர்கள்?

அந்த இரவில் என்னை ஹிப்னாடிஸம் செய்வதற்காக அந்த ஆள் வந்து, அவன் அங்கே மேலே பால்(கனி)...யில் உட்

கார்ந்து கொண்டிருந்ததை எத்தனை பேர் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்?

அவன் அங்கே கீழே இறங்கி வந்து, என்னை ஹிப்னாடிஸம் பண்ணி, என்னை ஒரு நாயைப் போன்று குரைக்கச் வைக்கப் போவதாய் இருந்தான்.

பரிசுத்த ஆவியானவர் மறுபக்கம் திரும்பி, "பிசாசின் மகனே" என்றார்.

அவன் அந்த நேரம் முதற்கொண்டு பக்கவாதத்தினால் தாக்கப்பட்டான்.

அது ஏறக்குறைய மூன்று வருடங் களுக்கு முன்பு நடந்ததாகும். பாருங்கள்?

அவர்கள் அவனை கட்டிடத்தை விட்டு வெளியே தூக்கிச் சென்றனர்.

உங்களால் தேவனோடு விளையாட முடியாது. நீங்கள் அதை விசுவாசித்தாக வேண்டும்.



# கூட்டத்தில் இருக்கும் குற்றம் கண்டுபிடிக்கும் எவருக்கும் நான் பொறுப்பல்ல



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: வியாதிகளும் துன்பங்களும், Para E-158

நாங்கள் இதைக் கூற முயற்சித்துக் கொண்டிருக்கிறோம், நீங்கள் கட்டாயம் பயபக்தியாய் இருந்தாக வேண்டும். நாங்கள் பொறுப்பல்ல...

நான் ஒவ்வொரு இரவும் நடை முறை ஒழுங்காக இதைக் கூற வேண்டியிருக் கிறது.

கூட்டத்தில் இருக்கும் குற்றம் கண்டு பிடிக்கும் எவருக்கும் நான் பொறுப்பல்ல.

இந்தக் காரியங்கள் ஒருவரிடமிருந்து மற்றவர்க்கு போகின்றன, குறிப்பாக

வலிப்பு நோயும் அவ்விதமான மற்ற வியாதிகளும்.

ஜனங்கள் கூட்டத்திற்கு பரிபூரண ஆரோக்கியத்தோடு வருகிறதை நான் கண்டிருக்கிறேன்; இங்கே ஒரு வலிப்பு நோயாளி உட்கார்ந்து இருக்கிறதைக் காண் பேன், இந்த வலிப்பு நோயாளி சுகமடைந் தவராக வெளியே போவார், அந்த குற்றம் கண்டுபிடிப்பவனோ முடவனாக வெளியே போவான்.

அநேகமாக ஒரே நேரத்தில் அவர்களில் 28 பேர் உள்ளே வந்து, காக்கை வலிப் பினால் பாதிக்கப்பட்டு தரையில் விழு கிறதை நான் கண்டிருக்கிறேன். அந்த பிசாசின் வல்லமை போகும்படியாக ஒரு இடத்தைக் கண்டுபிடித்து விடும்.

அந்த வலிப்பு நோய் அந்தப் பிள்ளையை விட்டு விலகியது, ஒரு குறிப்பிட்ட ஸ்தாபனத்தைச் சேர்ந்த 28 பேர் - மேய்ப்பரும் அந்த எல்லா 28 பேரும் வலிப்பு நோயை வாங்கிக் கொண்டார்கள், அவர்கள் வாயில் நுரை தள்ளியபடி, சரியாக அங்கே சபையோர் இருந்த இடத்திலேயே தரையில் விழுந்தார்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: ஆபிரகாமோடு தேவனுடைய உடன்படிக்கை

ஒரு ஊழியக்காரர் ஒரு சபைக் கூட்டத்தினரை அழைத்துக் கொண்டு வந்தார்.

வலிப்பு நோயினால் அவதிப்பட்ட ஒரு பிள்ளையினிமித்தம் அவர்கள் தங்களுடைய தலையை தாழ்த்திக் கொண்டிருக்க வேண்டுமென்று நான் அவர்களிடம் கேட்டுக் கொண்டேன், அந்தப் பிள்ளை தன்னுடைய நாவைத் தொடர்ந்து கடித்துக் கொண்டிருந்தது; அவர்கள் அதனுடைய வாயில் ஒரு குச்சியை வைத்திருந்தனர், அல்லது, துணிகளைத் துவைத்துக் காயப் போடும் போது, அதை பற்றிப்பிடிக்க வைக்கும் கிளிப்போடு

(clothespin), அதில் ஒரு துணியையும் வைத்து, அதனுடைய வாயில் வைத்திருந் தனர் - அது ஆர்கன்ஸாஸிலுள்ள ஜோன்ஸ்பரோவில் நடந்த சம்பவமாகும்.

அவன் அவ்விதமாக இந்த நாவைத் தொடர்ந்து கடிக்க முயற்சித்துக் கொண் டிருந்தான், அப்போது மேடையிலேயே அந்தப் பிள்ளைக்கு சிறிது நேரம் உணர் விழப்பு ஏற்பட்டது.

நான், 'இப்பொழுது, நீங்கள் எல்லாரும் உங்களுடைய தலையைத் கீழே தாழ்த்தி வையுங்கள்' என்று கூறி விட்டு, நான் ஜெபிக்கத் துவங்கினேன்.

அவர்களோ தங்கள் தலையைத் தாழ்த்தி வைக்கவில்லை.

நான் தொடர்ந்து சுற்றிலும் நோக்கிப் பார்த்து, "உங்கள் தலையை உயர்த்தி யிருப்பவர்கள், உங்களுடைய தலையை கீழே தாழ்த்தி விடுங்கள்" என்று கூறினேன்.

185. நான் தொடர்ந்து ஜெபிக்கத் துவங்கினேன், அவனோ தனது தலையைத் தாழ்த்தவில்லை.

நான் சுற்றும் முற்றும் திரும்பிப் பார்த்தேன்; அங்கே ஒரு ஆள் இவ் விதமாக தன்னுடைய தலையை வைத்துக் கொண்டு பின்னால் உட்கார்ந்து கொண் டிருந்தான், ஏறக்குறைய எட்டு அல்லது பத்து பேர் அவனோடு இருந்தனர், அல்லது அதற்கும் அதிகமான பேர்கள் இருந்தனர். நான், "ஐயா, உம்முடைய

தலையை கீழே தாழ்த்தி வையும்" என்றேன்.

அவன், "இது ஒரு பொது இடம், நான் அப்படி செய்ய வேண்டியதில்லை" என்றான்.

நான், "சரி, அப்படியானால், அது உம்மைப் பொறுத்தது' என்று கூறி விட்டு, 'பிதாவே, அந்த மனிதனின் நிலையின் நிமித்தமாக இந்த அப்பாவி பிள்ளை அவதிப்பட அனுமதியாதேயும்" என்றேன்.

186. இது சரியா இல்லையா என்று ஆர்கன்ஸாஸிலுள்ள ஜோன்ஸ்போரோ வில் இருக்கும் பழைமை நாகரீகமான வேதாகம வேளை கூடாரமாகிய ஜோன்ஸ் போரோ கூடாரத்தைச் சேர்ந்த ரிச்சர்ட் T. ரீட் (Richard T. Reed) அவர்களைக்

கேட்டுப்பாருங்கள். லிட்டில் ராக்கிலுள்ள, 505, விக்டர் தெருவைச் சேர்ந்த G. H. பிரெளன் அவர்களையும் கேட்டுப் பார்க்க லாம், அவர் அங்கே இருந்தார்.

187. **அந்த வலிப்பு நோய் அந்தப் பிள்ளையை விட்டு விலகியது, ஒரு குறிப்பிட்ட ஸ்தாபனத்தைச் சேர்ந்த 28 பேர் - மேய்ப்பரும் அந்த எல்லா 28 பேரும் வலிப்பு நோயை வாங்கிக் கொண்டார்கள், அவர்கள் வாயில் நுரை தள்ளியபடி, சரியாக அங்கே சபையோர் இருந்த இடத்திலேயே தரையில் விழுந்தார்கள்.**

நான் அறிந்துள்ள வரைக்கும், அவர் கள் இன்னும் அதை வைத்திருக்கிறார்கள்.

அவர்களில் அநேகர் வந்தார்கள், நான், "எனக்கு அதனோடு எந்த சம்பந்தமும்

கிடையாது; அது ஒரு தேவனுடைய சாபம், எனவே அது உங்களைப் பொறுத்தது. கீழ்ப்படியாமலிருந்தவன் நீ தான். உனக்கு விசுவாசம் இல்லை என்றால், கூட்டத்தை விட்டு வெளியே போய் விடு என்றும், அதைச் செய்ய வேண்டாம் என்றும் நான் உன்னிடம் கேட்டுக் கொண்டேனே. இப்பொழுது, அது உன்னைப் பொறுத்தது. எனக்கு அதனோடு எந்த சம்பந்தமும் கிடையாது. நான் அந்த பாவத்திற்காக ஜெபிக்கவும் மாட்டேன். இல்லை, ஐயா. அது உன்னைப் பொறுத்தது" என்று கூறி விட்டேன்.



# அந்த இரண்டு வியாதிகளும் அவனை பிடித்துக் கொண்டது. அதுவே அவனுடைய முடிவாயிற்று



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: மூவகை விசுவாசிகள், நவம்பர் 24, 1963, பத்தி எண் 203-218

அன்றிரவு நடந்த கூட்டத்தில் மேடை யின் மேல் வந்த அந்த மனிதனின் காரியத்தை குறித்து உங்களுக்கு ஞாபக மிருக்கும் என்று எண்ணுகிறேன். ஜெப அட்டைகளைக் குறித்தக் காரியம் ஒரு மனோவசியம் என்று அவன் எண்ணி யிருந்தான். அதை சோதித்தறிவதற்கு அவனுக்கு எல்லா உரிமையுமிருந்தது என்றும் அவன் எண்ணியிருந்தான். இந்த மனிதன் முழு சுவிசேஷத்தையும் விசுவாசி யாத ஓர் ஸ்தாபனத்தின் அங்கத்தினன். அவன் என்னை சோதித்தறியும்படி மேடை யின் மேல் வந்தபோது, நான் மிகவும் களைத்தவனாயிருந்தேன். ஊழியர்கள்

என்னை அங்கிருந்து அப்புறப்படுத்த ஆயத்தம் செய்து கொண்டிருந்தனர்.

அது ஒண்டாரியோவிலுள்ள வின்ட்சர் என்னுமிடத்தில் அமெரிக்க ஐக்கிய நாடு களில் டெட்ராய்ட் என்ற இடத்திலிருந்து வின்ட்சர் இடத்திலுள்ள ஒரு பெரிய அரங்கம்.

இந்த மனிதன் மங்கின நிறமுடைய உடையும் சிகப்பு கழுத்துப்பட்டையும் அணிந்தவனாக அங்கு மேடையில் வந்தான். அவன் மிகவும் சாமர்த்திய முள்ளவனாய் காணப்பட்டான். அப்பொ ழுது நான் அவனை நோக்கி, "நல்லது, ஐயா நான் உம் கையை பிடிக்க அனு மதிப்பீராக. நான் அநேக தரிசனங்களைக் கண்டு மிகவும் களைத்தவனாயிருக்கி றேன்" என்று கூறினேன். அவன் தன்

கரத்தை என் கரத்தில் வைத்தான். அப்பொழுது நான் அவனை நோக்கி, "ஐயா, உங்களுக்கு எந்த வியாதியும் இல்லை" என்று கூறினேன். அதற்கு அவன், "ஓ! எனக்கு இரண்டு வியாதி யுண்டு" என்று கூறினான்.

அதற்கு நான், "எங்கே நான் மறுபடியும் பார்க்கட்டும்" என்று கூறி அவனுடைய கையைப் பிடித்து பார்த்துவிட்டு, "இல்லை ஐயா வியாதிக்குரிய அடையாளங்கள் காணப்படவில்லை. ஆகவே, நீ ஒரு சுகதேகியான மனுஷன்" என்றேன்.

அதற்கு அவன், "என்னுடைய ஜெப அட்டையில் என்ன எழுதியிருக்கிறதென்று வாசியும்" என்று கூறினான்.

அப்பொழுது நான், "ஜெப அட்டையில் நீர் என்ன எழுதி வைத்திருந்தாலும், அதைக் குறித்து எனக்கு கவலையில்லை. ஜெப அட்டைக்கும் என்னுடைய ஊழியத் திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை" என்று கூறினேன். நான் ஒன்றையும் அறி யாதவனாக இவ்விதம் கூறிக்கொண்டிருந் தேன். மேலும் நான் மிகவும் களைத்து சோர்ந்து போயிருந்தேன். ஆனால் தேவ னுடைய கிருபையானது இன்னுமாக இங் கிருந்தது என்று ஞாபகம் கொள்ளுங்கள்.

அவர் உன்னை அனுப்புவாரென்றால், உன்னை முற்றிலுமாக காக்க வேண்டியது அவருடைய பொறுப்பாகும். அது என் னுடைய காரியம் அல்ல. அவரே அதன் காரணர். அவரே என்னை அனுப்பினார். சத்தியம் எதுவோ அதற்காக மட்டும் நிற்பதே என்னுடைய வேலையாகும்.

மோசே தன்னுடைய கோலை அங்கே போட்டபொழுது அது சர்ப்பமாயிற்று. மந்திரவாதிகளும் அதே காரியத்தை செய்தனர். தேவனுடைய கிருபைக்காக மோசே அங்கு காத்து நிற்பதைத் தவிர வேறு என்ன செய்திருக்க முடியும்? அவ்வளவே, அவன் அவருடைய கற் பனைகளை கைக்கொண்டான். பின்பு நடந்த சம்பவம் என்னவென்று உங்களுக் குத் தெரியுமல்லவா? பாருங்கள்.

அதுபோலத்தான் இச்சம்பவமும். இந்த மனிதன் அங்கு நின்று கொண்டு, "என் னுடைய ஜெப அட்டையை பாரும்" என்று கூறினான்.

அதற்கு நான், "நல்லது, நீங்கள் அதிக விசுவாசத்தையுடையவராயிருந்திருக்கின் றீர், ஆகவே உம் வியாதிகள் சுகமாக்கப்

பட்டிருக்கும்" என்று எதையும் யோசி யாதவனாய் கூறினேன்.

இதை நான் கூறினவுடனே அந்த மனிதன் தன் மேற்சட்டை பொத்தானை கழற்றி, தன்னுடைய நெஞ்சை முன்னுக்குத் தள்ளி சபையோர்களிடம் திரும்பி, "எல் லோரும் இங்கே கவனியுங்கள்" என்றான்.

அப்பொழுது நான், "இங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது" என்று யோசித் தேன்.

அவன் அவ்விதம் சபையாரின் கவ னத்தைத் திருப்பி, "இங்கே நடக்கும் தந்திரத்தைப் பார்த்தீர்களா?" என்று கேட் டான். (அதுதான் யூதாஸின் ஆவி - இவன் ஒரு பயபக்தியுள்ள மனிதனாகவும் ஒரு ஸ்தாபனத்தின் பிரசங்கியாயுமிருந்தான்).

அவன் மேலும் தொடர்ந்து, "எனக்கு அதிக விசுவாசம் இருக்கிறது என்று இவர் கூறுகிறார். இவர் அதிகமாக பெலவீனப் பட்டு விட்டதினால் மனோவசியம் செய்ய முடியவில்லை. இனிமேலும் மனோவசிய சக்தி இவரிடம் போவதில்லை. என் வியாதிகள் என்னவென்று நான் ஜெப அட்டையில் எழுதியிருக்கிறேன். அதி லுள்ளதைக் கூட இவரால் கூறமுடிய வில்லை. இது ஒரு ஏமாற்றுவித்தை" என்று கூறினான்.

அப்பொழுது நான், "என்ன நடந்து கொண்டிருக்கிறது?" என்று யோசித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது அங்கே தேவனுடைய கிருபையானது தாழ இறங்கி வந்தது.

அப்பொழுது நான் அவனைப் பார்த்து, "ஐயா, தேவனை ஏமாற்றும்படி சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?" என்று கேட்டேன். அவன் ஒரு நவநாகரீக யூதாஸாயிருந்தான்.

நான் மேலும் அவனை நோக்கி, "அமெரிக்காவிலுள்ள கிறிஸ்து சபை (Church of Christ)யில் நீ ஒரு பிரசங்கி யாயிருக்கிறாய். அதோ அங்கே நீல நிற உடையணிந்தவருடனும், அவருடைய மனைவியுடனும் அமர்ந்திருப்பது உன் மனைவியாகும். கடந்த இரவு நீங்கள் ஒரு மேஜையின் முன்பு அமர்ந்திருந்தீர்கள். அந்த மேஜையின் மேல் போட்டிருந்த விரிப்பின் நிறம் பச்சை. இந்த ஊழிய மானது மனோவசிய சக்தியினால் செய்யப் படுகிறதா என்பதை சோதித்தறியும்படி

நீங்கள் தீர்மானித்ததின் பலனாக நீ இந்த இரவிலே இங்கு வந்திருக்கிறாய்" என்று கூறினேன்.

அதற்கு அந்த மனிதன், "நீங்கள் கூறினது உண்மையும் சத்தியமுமாயிருக்கிறது. கர்த்தர் என் மேல் கிருபையாயிருப்பாராக" என்றான்.

நான் மேலும் தொடர்ந்து, "ஐயா, அந்த ஜெப அட்டையில் நீர் காசநோய் என்றும், புற்று நோய் என்றும் எழுதியிருக்கிறீர்; அந்த இரண்டு வியாதிகளையும் இந்த கணமே நீர் பெற்றுக் கொள்கிறீர், அது உமக்குச் சொந்தமானது" என்று கூறினேன்.

அப்பொழுது அந்த மனிதன் என்னுடைய கால்களைக் கட்டிப்பிடித்துக்

கொண்டு, "நான் அவ்விதம் நோக்கம் கொள்ளவில்லை. 'ஐயா" என்று கதறினான்.

அதற்கு நான், "என்னால் எந்தவித உதவியும் செய்ய முடியாது... நீங்கள் போகலாம், இது உமக்கும் தேவனுக்கு மிடையேயுள்ள காரியம். உம்முடைய அழிவை நீரே ஜெப அட்டையில் எழுதி விட்டீர்" என்று கூறினேன். அந்த இரண்டு வியாதிகளும் அவனை பிடித்துக் கொண் டது. அதுவே அவனுடைய முடிவாயிற்று.




அவனுடைய மனைவி அந்தப் பாதையில் சேற்றில் விழுந்து, என்னுடைய காற்சட்டையின் கால்களைப் பிடித்துக் கொண்டாள். என்னால் அசையக் கூட முடியவில்லை. அவர்களால் என்னை இழுக்க முடிவில்லை, அவளுடைய கணவனிடம் வரும்படியாக விடாப்பிடியாய் பிடித்துக் கொண்டாள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 50-01-00 வியாதிகளும் துன்பங்களும்

161. இப்பொழுது, ஒவ்வொருவரும் இதை நினைவுகூர வேண்டுமென்று நான் விரும்புகிறேன். நீங்கள்--நீங்கள் ஒவ் வொருவரும் எப்பொழுதுமே இந்தக் கூட்டங்களுக்கு வரவேற்கப்படுகிறீர்கள். ஆனால் உங்கள் தலையைத் தாழ்த்தும்படி நான் உங்களிடம் கேட்கும்போது, நீங்கள் கட்டாயம் உங்கள் தலையைத் தாழ்த்த வேண்டும். அப்போது நான்... நான் அல்லது இங்கே நின்று கொண்டிருக்கும் சகோதரன் பாஸ்வர்த் அவர்கள், உங்கள் தலையை உயர்த்தலாம் என்று இந்த ஒலிப்பெருக்கியில் கூறுவதை நீங்கள் கேட்கும் மட்டுமாக உங்கள் தலையை

உயர்த்தவே வேண்டாம். அதற்கு முன்பாக நீங்கள் உங்கள் தலையை உயர்த்தினால், என்ன சம்பவிக்கிறதோ அதற்கு நான் பொறுப்பல்ல.

162. பக்கத்தில் உட்கார்ந்து கொண் டிருக்கும், திரு. ஹுப்பர் அவர்கள், அவர் ஒரு... மற்றொரு கூட்டத்தில் இருந்த யாரோ ஒருவரை நான் காண விரும்பு கிறேன். அவர் எங்களோடு போனிக்ஸ், அரிசோனாவில் இருந்தார், அங்கே அப்பட்டணத்தின் அதிகாரிகளில் ஒருவன் கூட்டத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

163. அவன், “நல்லது, அது நல்ல தொரு மனோசாஸ்திர காரியம் தான். நான் அப்படியே... அதில் எதுவுமில்லை” என்றான்.

நான் தொடர்ந்து அம்மனிதனைக் குறித்த உணர்வைக் கொண்டேயிருந்தேன். அவன் பின்னால் என்னுடைய வலது பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தான். நான், “என்னுடைய வலது பக்கத்தில் இருக்கும் யாரோ ஒருவர் தங்கள் தலையை உயர்த்தி வைத்திருக்கிறார்” என்றேன். அவன் தன்னுடைய தலையை தாழ்த்தாமல் இருந்து கொண்டே இருந்தான்.

உதவிக்காரர்களில் ஒருவர் அவனைப் பார்த்து, “உங்கள் தலையைத் தாழ்த்தி வைத்திருங்கள்” என்று கூறினார்.

164. அவன் பட்டணத்தின் ஒரு அதிகாரியாக இருந்தான், எனவே அவன், “நான் என்னுடைய தலையைத் தாழ்த்த வேண்டியதில்லை” என்றான்.

“சரி.”

எனவே அவன் கூறினதை அவர்கள் என்னிடம் வந்து கூறினார்கள்.

165. நான் அங்கே ஒரு சிறு பிள்ளை யைக் கொண்டிருந்தேன், அவனிடம் ஆடைகளை இணைப்பதற்கான ஒரு குண்டூசி இருந்தது, அது ஒரு கந்தைத் துணியைச் சுற்றிலும் வைத்துப் பொதியப் பட்டிருந்தது, அவன்... முயற்சித்துக் கொண்டிருந்தான். அவன் வலிப்பு நோயி னால் சிறிது நேரம் உணர்விழந்து போய் விட்டான், அந்த வலிப்பு நோய் சரியாக அப்போதே மேடையில் உண்டானது. சிலசமயங்களில் வலிப்பு நோய் வரும் போது, அது அவர்களை சிறிது நேரம் உணர்வில்லாத நிலைக்குத் தள்ளி விடுகிறது.

166. நான், "சரி, ஐயா, நான் (உம்முடைய தலையைத் தாழ்த்தும்படி) உம்மிடம் கேட்டு விட்டேன். என்னால் செய்ய முடிந்தது அவ்வளவு தான்" என்றேன்.

167. நான் ஜெபித்தேன். நான், "தேவனே, அந்தப் பிள்ளை - அந்த மனிதனின் கீழ்ப்படியாமையின் நிமித்த மாக இந்த அப்பாவி பிள்ளையை வருத் தப்பட அனுமதியாதேயும்" என்றேன். அது அந்தப் பிள்ளையை விட்டு அகன்று போனது. அம்மனிதனோ அப்படியே சிரித்துக் கொண்டு தொடர்ந்து அவ்வாறு இருந்து கொண்டிருந்தான்.

168. ஏறக்குறைய இரண்டு நாட்கள் கழித்து, அவன் வந்தான் - அவன் ஒரு வினோதமான உணர்வை உணரத்

தொடங்கி, “ஓ, நான் வெறுமனே அவ்வாறு எண்ணிக் கொண்டிருக்கிறேன், அவ்வளவு தான், அது வெறுமனே - அது வெறுமனே என்னுடைய கற்பனை தான், நான் நன்றாகத் தான் ஆகிக் கொண்டிருக்கிறேன்” என்றான். அதை (உதறித்தள்ளி விட்டு) அதிலிருந்து அவன் விடுபட முயற் சித்தான்.

ஒரு நாள், அல்லது அதற்குப் பிறகு, அதிகாரிகள் அவனை பட்டணத்திற்கு தூக்கிக் கொண்டு போனார்கள், அவன் சுற்றி சுற்றி நடந்து கொண்டிருந்தான். ஏறக்குறைய 6 வாரங்கள் கழித்து, அவன்...க்கு வந்தான்.

169. நான் சார்ல்ஸ் ஃபுல்லரில் ஒரு ஆராதனையை நடத்திக் கொண்டிருந் தேன்... அது லாங் பீச்சில், சார்ல்ஸ்

ஃபுல்லர் அவர்களோடு. உங்களில் யாராகிலும் அங்கே இருந்திருந்தால், எத்தனை பேர் அங்கே உள்ளே இருந்தனர் என்பது உங்களுக்குத் தெரியும். அங்கே உள்ளே உண்மையில் ஆயிரக்கணக்கானோர் அந்தக் கடற்கரையில் மேலும் கீழுமாக நின்று கொண்டிருந்தனர், எனவே அவர்கள்... அவனால் உள்ளே வர முடியவில்லை. (பின்னர்) லாஸ் ஏஞ்சலிஸிற்கும் வந்தான், அங்கேயும் அவனால் உள்ளே வர முடியவில்லை.

170. கடைசியாக, மோடஸ்டோவில், மழை பெய்து கொண்டிருந்த ஒரு இரவில், அவனுடைய மனைவி பாதையில் விழுந்தாள். அவனுடைய முகத்தில் தாடி வளர்ந்து, அச்சமூட்டுகிறதாக காணப்பட்டது, அவன் பார்க்க பயங்கரமாக இருந்தான். அங்கே அவன் இருந்தான்.

“சகோதரன் பிரன்ஹாமே, ஏதாகிலும் செய்யப்பட்டாக வேண்டும். அவர்-அவர்-அவர் சாப்பிடுவது கூட கிடையாது. எங்க ளால் வலுக்கட்டாயமாகவும் தண்ணீரை அவருக்குக் கொடுக்க முடியவில்லை” என்று கூறப்பட்டது. ஓ, அவன் பயங்கர மான தோற்றத்தோடு, அங்கே உட்கார்ந்து கொண்டிருந்தான், அவனுடைய கண்கள் அப்படியே உற்றுப் பார்த்துக் கொண் டிருந்தன.

171. நான் உள்ளே நடந்து சென்றேன். அவன், “ஹம்ம்ம்ம்” என்றவாறு இவ்வித மாக என்னிடமிருந்து பின்னால் போகத் துவங்கினான்.

172. அந்தக் கதவுகளைப் பூட்டு விடும்படி நான் அவர்களிடம் கூறினேன். நாங்கள் களைப்படைந்திருந்தோம், அந்த

சனிக்கிழமை இரவில் அங்கே விளை யாட்டுக் கழகக் கட்டிடத்தில் மணிக்கணக் காக இருந்து, வியாதியஸ்தரோடு இடை பட்டுக் கொண்டிருந்தோம். ஜனங்களை தூரமாக வைக்கும்படி அந்தக் கதவைப் பூட்டும்படியாக சகோதரன் பிரௌன் அவர்களும் சகோதரன் மூர் அவர்களும் எனக்கிருந்தனர். அவனுடைய மனைவி அந்தப் பாதையில் சேற்றில் விழுந்து, என்னுடைய காற்சட்டையின் கால்களைப் பிடித்துக் கொண்டாள். என்னால் அசையக் கூட முடியவில்லை. அவர்களால் என்னை இழுக்க முடிவில்லை, அவளுடைய கணவனிடம் வரும்படியாக விடாப்பிடி யாய் பிடித்துக் கொண்டாள்.

173. ஏறக்குறைய 45 நிமிடங்கள் கழித்து, அது அவனை விட்டு அகன்று

போனது. அவன் என்னைச் சுற்றிலும் தன்னுடைய கரங்களைப் போட்டுக் கொண்டு என்னைக் கட்டி அணைத்துக் கொண்டு, இவ்விதமாக தன்னுடைய தலையில் அவருடைய தொப்பியை வைத்து, என்னுடைய கரத்தைக் குலுக்கி, ஒரு சுகமடைந்த மனிதனாக வீட்டிற்குச் சென்றான்.

174. நண்பர்களே, நான் உங்களிடம் இதைக் கூறுகிறேன், நான் ஒரு குற்றம் கண்டுபிடிப்பவனாக இருந்தால், நான் அது நடந்து கொண்டிருந்த இடத்தைச் சுற்றிலும் இருந்திருக்கக் கூட மாட்டேன். நான் உங்களுக்கு உதவி செய்யவே இங்கிருக் கிறேன், உங்களுக்கு இடையூறு செய்ய அல்ல. நல்லது, இப்பொழுது, அதை சற்று ஞாபகம் கொள்ளுங்கள். நீங்கள் உங்கள்

தலையைத் தாழ்த்தி வைத்திருந்து, ஏதா கிலும் சம்பவிக்குமானால், அப்போது அதற்காக நான் பொறுப்பாளியாயிருக் கிறேன். இப்பொழுது, நீங்கள் அதைக் குறித்து கதை விட முடியாது, ஏனென்றால் நீங்கள் இங்கே வரும்போது நான் அதை அறிந்து கொள்வேன். ஆனால் இப்பொ ழுது, நீங்கள் அப்படியே பயபக்தியோடு, ஜெபத்தில் இருங்கள். உங்கள் தலையைத் தாழ்த்தும்படி நான் உங்களிடம் கேட்டுக் கொள்ளும் போது, உங்கள் தலையைத் தாழ்த்தி வைத்திருங்கள். நீங்கள் கடந்த இரவில் மிகவும் அன்போடு அதைச் செய்தீர்கள். இன்றிரவும் நீங்கள் அதே காரியத்தைச் செய்யுங்கள், அப்பொழுது எல்லாமும் சரியாக இருக்கும்.





# உங்களால் தேவனோடு விளையாட முடியாது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து